# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

### வழக்கு எண்கள். SA 11025/F/2024 & CP 3345/F/2024

திரு.மொ.அல்லாபாட்சா, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 213.

### ஆணை

இவ்வழக்குகளின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.மொ.அல்லாபாட்சா, அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைவிதிகள் 2012-ன்படி தவறாமல் விசாரணையின்போது ஆணையத்தின் முன்பாக பொதுத்தகவல் அலுவலர் ஆஜராக வேண்டும் என்று ஆணையத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தன்னால் விசாரணைக்கு வர இயலவில்லை எனில், தனக்கு இணையான பதவியில் உள்ள அலுவலரை ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராக அனுப்பிவைத்திருக்கவேண்டும். அவ்வாறு ஆணையத்தின் அழைப்பாணையை சிறுதும் பொருட்படுத்தாமல் இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகதாததை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது.

2. மனுதாரர் 15.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில், “எடுத்தவாய்நத்தம் ஊராட்சிக்கு சொந்தமான நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றிய விவரங்கள் 01.01.2020 முதல் 01.06.2024 வரையுள்ள காலத்திற்கு தருக“ என்பன போன்ற தகவல்களை 7 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார

வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 213 அவர்களுக்கு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்கப்படவில்லை என 16.07.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் முதல் மேல்முறையீட்டு மனுக்களை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் பெறப்படாததால் 22.08.2024 தேதியிட்டு பிரிவு **19(3)**-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 16.07.2024 தேதியிட்டு பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவையும் இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அம்மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்குகள் 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் 01.04.2026 தேதியிட்டு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் மனுதாரருக்கு தகவல்கள் கடித எண்.ஆ4/1851/2024, நாள் 26.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 1, 2, 5, மற்றும் 6-க்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், பொது தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- ***இன்றைய (01.04.2026) விசாரணைக்கு ஆஜராக பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டும் இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை. மேலும் பொதுத் தகவல் அலுவலர் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனில், தனக்கு இணையான பதவியில் உள்ள அலுவலரை ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராக அனுப்பிவைத்திருக்கவேண்டும் அவ்வாறு அனுப்பாமல் ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராகாததற்காக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 1, 2, 5, மற்றும் 6-க்கு உரிய / சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.*

- *மனுதாரரின் 15.06.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 11025/F/2024 & CP 3345/F/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 213.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (15.06.2024 தேதிய),**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**வட்டார வளர்ச்சி அலுவலகம்,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 213.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.மொ.அல்லாபாட்சா,
காட்டுக்கொட்டாய்,
எடுத்தவாய் நத்தம் கிராமம் (ம) அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 207.

**<u>நகல்</u>**

உதவி இயக்குநர்,
உதவி இயக்குநர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-